# ஸ்ரீ பலராமர் ஆலயம்

## சாந்திப்பிரியா

(இதுவரை எந்த இதழிலும் வெளியாகாத கதை இது)



ஓரிசா மானிலத்தில் தென்னக்கனால் மாவட்டத்தில் பகவான் பலராமனுக்கு சுமார் 90 அடி உயரத்தில் ஒரு ஆலயம் உள்ளது. கட்டக் (Cuttack) மாவட்டம் மற்றும் சம்பல்பூருக்கு இடையே தேசிய நெருஞ்சாலை 42 பக்கத்தில் அமைந்துள்ள இடத்தில் பன்னிரண்டு, பதிமூன்றாம் நூற்றாண்டில் வைஷணப் பிரிவை சேர்ந்த பானுதேவா என்ற மன்னனின் ஆட்சியில் சந்திரிகா தேவி என்பவரினால் அந்த ஆலயம் கட்டப்பட்டதாக கல்வெட்டுக்கள் கூறுகின்றன. அனங்கபீமா-III என்ற மன்னன் பலராமரின் சிலையை முதலில் பூரி நகருக்கு கொண்டு சென்றதாகவும், பலராமர் அதை ஏற்காததினால் ஹிண்டோல் எனும் கிராமத்தில் அந்த சிலையை வைத்து வழிபட்டாராம். முகலாய மன்னர்களின் படையெடுப்பிற்குப் பிறகு பஞ்ஞா என்ற மன்னனை தோற்கடித்த ஹரிசிங் என்பவரினால் அந்த சிலை தென்னக்கல்லுக்கு மீண்டும் கொண்டு வரப்பட்டது என்று மற்றொரு செய்தி கூறுகின்றது.

ஆனால் ஆலயத்தை நிறுவியவர் சந்திரிகா தேவிதான் என்பதை அனைவரும் ஏற்கின்றனர்.

பிந்து சரோவர் ஏரிக்கரைப் பக்கத்தில் உள்ள இந்த ஆலயத்தில் பலராமரை மட்டும் இன்றி, கிருஷ்ணர் மற்றும் சுபத்திராவையும் வழிபடுகின்றனர். பலராமர் ஏழு தலை நாகம் ஒன்றின் கீழ் நின்று கொண்டு இருப்பது போலவும், கிருஷ்ணர் கதையும் சங்கும் ஏந்தி நிற்கும் கோலத்திலும் உள்ளார். பலராமர் விஷ்ணுவின் அவதாரம் என்றும் அவரே பலராமன் உருவில் அவதரித்த ஆதிசேஷன் எனவும் கருதப்படுவதினால் ஏழு தலை நாகத்தின் அடியில் அவர் காணப்படுகின்றார். அந்த ஆலயத்திற்கு ஆனந்த வாசுதேவர் ஆலயம் என்று பெயர். கிருஷ்ணரும், பலராமனும் வாசுதேவருக்கு மகன்களாகப் பிறந்து அவருக்கு மன ஆனந்தத்தை (வாசுதேவருக்கு) தந்ததினால், ஆனந்தம் அடைந்த வாசுதேவரின் பிள்ளைகளை பூஜிக்கும் இடமான அந்த ஆலயத்தின் பெயர் ஆனந்த வாசுதேவர் என ஆயிற்றாம். இன்னொரு கருத்து என்ன எனில் பலராமருடைய பட்டப் பெயர் இராமா வாசுதேவர் என்பது. இராமா என்பதின் அர்த்தம் ஆனந்தம் என்பதினால் ஆனந்த வாசுதேவர் என்ற பெயர் ஆலயத்திற்கு வைக்கப்பட்டது. புவனேஸ்வரில் உள்ள வைஷ்ணவ ஆலயம் இது. மற்ற ஆலயங்கள் அனைத்தும் சைவப் பிரிவையும், ஜைன, புத்தப் பிரிவையும் சேர்ந்தவை. அது போல உத்திரப் பிரதேசத்திலும் விருந்தாவன் எனும் இடத்தில் பலராமனுக்கு 1975 ஆம் ஆண்டில் ஒரு ஆலயம் கட்டப்பட்டு உள்ளது. அதை நிறுவியவர்கள் கௌடியா மடப் சைத்தன்ய மகாப் பிரபுவின் வழியினரான பக்தி வேதாந்தஸ்வாமி பிரபுபாதா ஆவார்.

பலராமன் கிருஷ்ண பகவானின் சகோதரர் என்று தெரிந்தாலும் அவர் மூத்தவரா இல்லை இளையவரா என்பது குறித்து தெளிவான கருத்து இல்லை. ஆனால் பொதுவாக பலராமரை கிருஷ்ணரின் மூத்த சகோதரராகவே ஏற்றுக் கொண்டு உள்ளனர். கம்சனால் சிறையில் தள்ளப்பட்ட தேவகி-வசுதேவருக்கு மகனாகப் பிறந்தவர் பலராமர். ஆனால் ஆண் குழந்தை என்பதினால் கம்சன் கொன்று விடுவான் என்ற பயத்தினாலும், ரோகிணி தனக்கு ஒரு குழந்தை வேண்டும் என

விரும்பியதாலும், தேவகியின் வயிற்றில் தோன்றிய கருவை எதோ ஒரு இனம் புரியாத சக்தியின் துணையினால் ரோகிணியின் வயிற்றுக்குள் மாற்றியதான கதையும் உண்டு. தேவகி சிறையில் வாடிக் கொண்டு இருந்த சமயத்தில் ரோகிணி தப்பி ஓடி கோகுலத்தில் நந்த மகராஜ் என்பவர் வீட்டில் அடைக்கலம் ஆகி இருந்தார். அவளை கம்சனால் கண்டு பிடிக்க முடியவில்லை. அவள் வயிற்றில் தெய்வீகமாகச் சென்று குழந்தையாகப் பிறந்தார் பலராமர்.

சில புராணங்களின் கதைப்படி பலராமன் கிருஷ்ணரைவிட அதிக சக்தி வாய்ந்தவர், அவரே கிருஷ்ணனுக்கு அனைத்து வெற்றிகளிலும் துணை புரிந்தவர் என்ற கருத்தும் உள்ளது. இன்னொரு நம்பிக்கை என்ன எனில் பலராமன் கிருஷ்ணருடைய முந்தைய அவதாரம், கிருஷ்ணருக்குத் தேவையான அனைத்து சக்திகளையும் அவரே தந்தார் என்பது. பலராமரை விஷ்ணுவின் எட்டாவது அவதாரப் புருஷர் என்று கருதுபவர்களும் உண்டு. அதாவது ராமர் விஷ்ணுவின் ஏழாவது அவதாரம் எனவும் அதற்கு அடுத்த அவதாரம் பலராமன் என்று நம்பப்படுகின்றது. விஷ்ணு தனது தலையில் இருந்து இரு முடிகளை எடுத்து அவற்றை கிருஷ்ணர், பலராமர் என கருவாக தேவகியின் வயிற்றில் வைத்து அவர்களுக்கு அவதாரம் கொடுக்க கறுப்பு முடி கிருஷ்ணராகவும் வெள்ளை முடி பலராமராகவும் உயிர் பெற்றதாம்.

இத்தனை பண்புகள் இருந்தவர் ஏன் கிருஷ்ணரைப் போல கடவுளாகப் போற்றப்படவில்லை ? காரணம் பலராமர் அவருக்கென தனிமையான அவதாரம் எடுக்கவில்லை, அவர் கிருஷ்ணருடைய நிழல் உருவம். சரித்திரத்தில் கிருஷ்ண அவதாரம் மூலம் பல முக்கியமான நிகழ்சிகளை மகாவிஷ்ணு நடத்தி முடிக்க வேண்டி இருந்ததினால் தனக்கு உறு துணையாகவும், சக்தி கொடுக்கவும் தன்னுடைய நாக சேஷனை பலராம உருவில் அவதரிக்கக் கூறினார் எனவும், எப்படி இராமனுக்கு துணை நின்ற லஷ்மணர் தனிக் கடவுளாக பூஜிக்கப்படவில்லையோ அது போலத்தான் பலராமரும் தனிக் கடவுளாக ஆராதிக்கப்படவில்லை எனவும் கருத்துக்கள் உள்ளன. ஆனால் பலராமருடைய சக்தியை புரிந்து கொண்ட சில பிரிவினர் அவருக்கும் கிருஷ்ணருக்கு இணையான மரியாதை தரவேண்டும் என விரும்பியதினால் ஆலயம் அமைத்து

பூஜித்தனர். கௌடியா மடத்தினர் பலராமனை மிக உயர்வாக போற்றுகின்றனர்.

மகாபாரதம் நடந்தேறிய பொழுது துரியோதனன் மற்றும் பீமன் இருவருக்கும் பலராமரே ஆசானாக இருந்து கதை யுத்தப் பயிற்சி தந்தார். ஆகவே யுத்தம் துவங்கியதும் தான் எவர் பக்கமும் சாயாமல் நடுநிலை வகிக்க முடிவு செய்து அந்த இடத்தை விட்டு வெளியேறி விட்டார். இறுதியில் யுத்தத்தில் பீமன் தனது இன்னொரு சிஷ்யனான துரியோதனனை ஏமாற்றி துடிக்கத் துடிக்கக் கொன்ற பொழுது வெகுண்டு எழுந்த பலராமர் பீமனைக் கொல்லச் சென்ற பொழுது கிருஷ்ணர் அவரிடம் துரியோதனன் செய்த தவறுகளை எடுத்துரைத்து சாந்தப்படுத்த வேண்டியதாயிற்று.

விருந்தாவனத்தில் இருந்த பன்னிரண்டு வனங்களில் ஒன்றான தலவனா காட்டில் இருந்த தேனுகாசுரா என்ற அசுரனை வதம் செய்தார். அங்கிருந்த மரங்களை கிருஷ்ணருக்கு நமஸ்கரிப்பது போல இருக்குமாறு வளைத்து வைத்து விட்டார். பலராமருக்கும் தன்னுடைய பெண் நண்பிகளான கோபிகைகளுடன் விளையாட விருப்பம் உண்டு . ஒரு முறை யமுனை நதியில் அவர் குளிக்கச் சென்ற பொழுது யமுனை தேவியை கேளிக்கைக்கு அழைத்தார். அவள் மறுக்கவே அந்த யமுனை நதியையே தன் கலப்பையினால் இழுத்தார். அதனால் பயந்து போன யமுனை அவரிடம் வந்து மன்னிப்புக் கோரினாள் என்ற கதையும் உள்ளது. சத்ய யுகத்தில் இருந்த மன்னன் ரைவத்தா தன் மகள் ரேவதிக்கு தகுந்த மணமகனை தேடிக்கொண்டு பிரும்ம லோகம் சென்றான். பிரும்மாவிடம் தனது மகளுக்கு திருமணம் செய்ய தகுந்த வரன் தேடிக்கொண்டு இருப்பதைக் கூறி ஆலோசனை நடத்திக் கொண்டு இருந்த பொழுது சத்ய யுகம் முடிந்து துவாபர யுகமும் முடிவடையும் தருவாயில் வந்து விட்டது. அப்பொழுதுதான் பலராமனுக்கும் ரேவதிக்கும் திருமணம் நடந்தது. ஒரு முறை நைமிசாரண்ய ஷேத்திரத்தில் அர்ஜுனனின் வாரிசான பரிஷ்ஷித் ஒரு யாகம் நடத்திக் கொண்டு பாகவத விளக்கம் பெற்றுக் கொண்டு இருக்கையில் தற்காலிகமாக வியாச முனிவருடைய ஒரு சிஷ்யர் தலைமை தாங்கினார். அங்கு வந்த பலராமர், அந்த பண்டிதர் அதற்கு தகுதி வாய்ந்தவர் இல்லை என்பதை

உணர்ந்து கொண்டு அவரை ஒரு தர்பையினால் எரித்து விட்டு வேறு ஒருவரை அங்கு நியமித்தார்.

இப்படியாக வாழ்ந்து கொண்டு இருந்தவர், யாதவர்களின் ஒற்றுமையின்மையில் ஏற்பட்ட யுத்தத்தினால் மனம் வெறுத்து மறைந்த தன்னுடைய சகோதர் ஆன கிருஷ்ணருடைய பிரிவைத் தாங்க முடியாமல், தனி இடத்திற்கு சென்று அமர்ந்து கொண்டார். அவர் தலையில் இருந்து நாகசேஷன் வெளியேறிப் போனதாகவும், அதன் மூலம் அவரும் மறைந்து போனதாகவும் ஒரு வரலாறு உள்ளது. அதனால்தான் அவரை விஷ்ணுவின் வாகனமான நாகசேஷன் எனக் கருதினர்.